# உடன்பிறப்பே... 19

**தி.மு.க என்பது எதிரிகளால் அழிக்கமுடியாத இரும்புக்கோட்டை. இந்தக் கோட்டையை கட்டியெழுப்பி, இயக்க வரலாற்றில் இடம்பிடித்த தீரர்கள் சிலரை, வாரா வாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்தவகையில் இந்த வாரம், பெரியார்-அண்ணா-கலைஞருடன் பயணித்து கழகம் வளர்த்த வே.தங்கபாண்டியன் அவர்களைப் பற்றிப் பார்ப்போம்.**

ஓவியம் : ரவி பேலட்



# வே.தங்கபாண்டியன் என்கிற ‘தங்கா’ பாண்டியன்!

*1976*-ஆம் ஆண்டு, மதுரை மத்திய சிறைச்சாலை. மிசா கைதிகளாக அடைக்கப்பட்டிருந்த கழக முன்னோடிகள் கூடி முடிவெடுக்கின்றனர். அது ஒரு சபதம் ஏற்பு.

“இந்தச் சிறையில் இருந்து உயிருடன் திரும்பினாலும் அல்லது உயிரற்ற சடலமாகச் சென்றாலும், கழகத்துக்கு எதிராகவும், கலைஞருக்கு எதிராகவும் எந்த வாக்குமூலத்தையும் நாம் அளிக்கக் கூடாது..!”

அப்படியாக, உயிருக்கும் அஞ்சாது, கழகம் காக்க சபதம் ஏற்ற வீரர்களில் ஒருவர் வே.தங்கபாண்டியன். அவர் உயிருடன் இருந்தவரை மதுரைக்குத் தெற்கே அவர்தான் கழகத்தின் அடையாளம்.

## மல்லாங்கிணறு மைந்தன்

இயற்பெயர் வே.தங்கபாண்டியன். முத்தமிழறிஞர் கலைஞர் அவருக்கு வைத்த செல்லப் பெயர் **‘தங்கா பாண்டியன்’**. ஆமாம், கழக வேலையாக சென்னை வந்தால், கலைஞருடன் சந்திப்பு முடிந்ததும், தனது தொகுதி, தனது மாவட்டம், தனது மாவட்டக் கழகத் தொண்டர்கள் எனச் சொந்த ஊர் அவரை அழைத்து விடும். அப்படித் தனது தொகுதியைவிட்டு வெளியே தங்காத பாண்டியனாக அவர் இருந்ததால்தான், இன்றும் அவரைத் தொகுதி மக்கள் ‘மல்லாங்கிணறு சார்’ என அன்பொழுக நினைக்கிறார்கள்.

சாயல்குடியைப் பூர்வீகமாகக் கொண்டவர் தங்கபாண்டியன். அங்கு செல்வாக்காகத் திகழ்ந்த வேலுச்சாமி - வேலு நாச்சியார் ஆகியோருக்கு இரண்டாவது மகனாக 1933-ஆம் ஆண்டில் பிறந்தார். சாயல்குடியில் ஆரம்பக் கல்வி. பின்னர், மதுரை தியாகராசர் கல்லூரியில் பட்டம் படித்தார்.

பட்டம் படிக்க வந்த இடத்தில், திராவிட மாணவர் மன்றத்தின் வழி அரசியல் பாடம் படிக்கத் தொடங்கினார். தியாகராசர் கல்லூரியின் இளங்கோ மன்றத்தில் செயல்பட்டவர், பேரறிஞர் அண்ணாவை அழைத்துக் கூட்டங்கள் நடத்தி இருக்கிறார்.

## கண்ணீர்த் துளிகள்

அரசியல் எழுச்சி பெற்ற அந்த இளைஞர், கழகம் தொடங்கிய நாள் முதலே அடிப்படை உறுப்பினராகத் தன்னை இணைத்துக் கொண்டு கழகத்தின் ஆயிரக்கணக்கான இதயங்களில் ஒன்றாகத் துடித்தார்.

பேரறிஞர் அண்ணா தனது **‘திராவிட நாடு’** ஏட்டில், **‘பெரியாரின் கண்ணீர் துளிகள்’** என வெளியிட்ட பட்டியலில் இடம்பெற்றவர் தங்கபாண்டியன். கல்லூரிப் படிப்புக்குப் பின் ஆசிரியர் பணியாக மல்லாங்கிணறு வந்தவர், அங்கேயும் தனது அரசியல் பணிகளைத் தொடர்ந்தார்.

## பாண்டியருக்கு கிடைத்த மாலை!

1962-ஆம் ஆண்டில், இவர் தன் குடும்பத்தை எதிர்த்து காதல் + கலப்பு + பதிவுத் திருமணம் செய்தது, அப்போதே பெரிய கலக நடவடிக்கை. ஆசிரியப் பணியுடன், அரசியல் பணியும் செய்து வந்தவர் ஒரு கட்டத்தில் ஆசிரியர் பணியைக் கைவிட்டார். அண்ணா அழைத்தார், அரசியல் முழுநேரமாக அழைத்தது. கலைஞரைக் கண்டார்.

1967-இல், கழக ஆட்சி அமைந்ததும் அண்ணா, கழகத்தின் முன்னோடித் தலைவர்களில் ஒருவரான எஸ்.எஸ்.தென்னரசுவிடம், ‘படித்த இளைஞர், கழகத்தில் ஆற்றலுடன் தொண்டாற்றும் இளைஞர் ஒருவரைக் கொண்டு வா. மேலவைக்கு வேண்டும்’ என ஆணையிட, அவர் தங்கபாண்டியனை அடையாளம் காட்டினார்.

தொடர்ந்து, சென்னையில் மருத்துவச் சிகிச்சையில் இருந்த அண்ணாவைச் சந்திக்கிறார் தங்கபாண்டியன். சந்திப்பு முடிந்ததும் ‘நீ கலைஞரைச் சென்று பார்’ என வழி அனுப்புகிறார். தங்கபாண்டியனை ஆரத் தழுவி வரவேற்ற கலைஞர், “ஒரு யானையே தானாக வந்து உன் கழுத்தில் மாலையிடுகிறது” என வாழ்த்தி அரவணைத்துக் கொண்டார். இப்படித்தான் அவரது சட்ட மேலவை நுழைவு நடைபெற்றது.

## பெயிலில் வந்து வழங்கிய வாழ்த்து!

கழகத்தின் முன்னோடிகளுக்குப் போராட்டங்களும், சிறைவாசங்களும் பழகிப்போனவை. கழகம் போராட்டம் அறிவித்தால், மாற்று உடுப்புகளோடு செல்வது வாடிக்கை. ஆனால், அவர்கள் கைது செய்யப்பட்டால், எங்கு கொண்டு செல்லப் படுகிறார்கள், யாரால் கைது செய்யப்படுகிறார்கள் என்பதெல்லாம் குடும்பத்தினருக்குத் தெரியாது அல்லது தெரிவிக்கப்படாது.

சில நாட்களுக்குப் பின்னர் அல்லது தீவிர தேடுதலுக்குப் பின்னர் கழகத்தினர் உதவியோடு அந்தத் தகவல்கள் தெரியவரும். இப்படியான நாட்களில் காவல் நிலைய வாசல்களிலும், மாவட்ட ஆட்சியர் அலுவலக வாசல்களிலும் குடும்பத்தினர் காத்திருந்து கதறிய அனுபவங்கள், தங்கபாண்டியன் குடும்பத்தினரும் அனுபவித்த ஒன்று. அப்படி நின்ற இளம்பிராயத்தைச் சேர்ந்தவர்கள்தான் இன்றைக்கு நிதித்துறை அமைச்சராக இருக்கும் தங்கம் தென்னரசு, நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் ஆகியோர்.

**கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என கழகத் தொண்டர்களின் அரசியல் ஆசிரியராக வழி நடத்தியதால்தான் அந்தப் பொறுப்பில் 23 ஆண்டு காலம் சோர்வு இல்லாமல் , மாசு மரு சுவடுகளின்றிச் செயல்பட முடிந்தது.**

பிள்ளைகளின் திருமணம் உள்ளிட்ட முக்கிய நிகழ்வுகளின்போதெல்லாம் சிறையில் இருந்து பெயில் வாங்கி வந்து, வாழ்த்திவிட்டுச் சென்ற வரலாற்றினை வெறும் நினைவுகள் எனச் சுருக்கிவிட முடியாது.

## தோல்விகளால் சலிப்படையாத தீரர்!

கலைஞரின் அன்புக்கு இணங்க 12 ஆண்டுகள் மேலவை உறுப்பினராகச் செயல்பட்டவர் தங்கபாண்டியன். அவருக்கு மிகவும் நெருக்கமான அருப்புக்கோட்டை தொகுதியில் போட்டியிட்டு மூன்று முறை தோல்வியைத் தழுவினாலும், மக்கள் மீது கொண்ட அன்பும் நம்பிக்கையையும் அவர் கைவிட்டதே இல்லை.

தோல்வியுறும்போதெல்லாம் அவர் வீட்டில் மக்கள்வெள்ளம் சூழ்ந்திருக்கும். 1989-இல், அதே அருப்புக்கோட்டை தொகுதியில் இருந்து கலைஞருக்கு வெற்றியைக் கொண்டு வந்தார். மீண்டும் 1996-ஆம் ஆண்டில் வெற்றியைக் கொண்டு வந்தவருக்கு, கூட்டுறவுத் துறை அமைச்சர், பின்னர் வணிக வரித்துறை அமைச்சர் எனப் பொறுப்புகளை வழங்கி அழகு பார்த்தார் கலைஞர்.

1974-ஆம் ஆண்டில் மாநில சுயாட்சித் தீர்மானத்தைக் கொண்டுவந்தபோது, அந்தத் தீர்மானத்தின் மீது பேசுவதற்கு, கலைஞரால் தேர்வு செய்யப்பட்டவர்களின் பட்டியலில் தங்கப்பாண்டியனும் இருந்தார். அந்தத் தீர்மானம் உயிர்ப்புடன் இருக்கும் காலம் வரை கலைஞருடன் தங்கபாண்டியனும் நினைவுகூரப்படுவார்.

## நீண்ட கால மாவட்டச் செயலாளர்

கழக வரலாற்றில் மிக நீண்ட காலம் மாவட்டச் செயலாளராகச் செயல்பட்டவர் என்கிற பெருமை தங்கபாண்டியனைச் சேரும். 1974-ஆம் ஆண்டில், கழகத்தின் முகவை மேற்கு மாவட்டச் செயலாளராக நியமித்தார் கலைஞர். அதற்குப் பின்னர் ஒருங்கிணைந்த ராமநாதபுரம் மாவட்டம், காமராஜர் மாவட்டம், விருதுநகர் மாவட்டம் என ஆட்சி மாவட்டங்களாகப் பிரிந்தாலும், பெயர் மாற்றினாலும் கழக மாவட்டத்தில் அவர் இறப்பு வரை மாவட்டச் செயலாளராக இருந்தவர்.

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என கழகத் தொண்டர்களின் அரசியல் ஆசிரியராக வழி நடத்தியதால்தான் அந்தப் பொறுப்பில் 23 ஆண்டு காலம் சோர்வு இல்லாமல், மாசு மரு சுவடுகளின்றிச் செயல்பட முடிந்தது. அத்தனை ஆண்டு காலம் கட்சிப் பொறுப்புகளிலும், ஆட்சிப் பொறுப்புகளிலும் இருந்தாலும் சென்னையில் அவருக்கு என வீடு இருந்ததில்லை. அதனாலேயே ‘தங்கா பாண்டியன்’ என்று கலைஞர் கொடுத்த அடைமொழி, அர்த்தம் மிகுந்ததாகிறது.

தலைவரிடம் தொலைபேசியில் பேசும்போதுகூட அவசரமாக எழுந்து நிற்கும் அந்த தங்கபாண்டியன், 1997-ஆம் ஆண்டில், கலைஞரின் ஆணையை ஏற்று, ராஜபாளையத்தில் நடந்த கலவரத்தின்போது அமைதிப்படுத்த சென்றவர், தனக்கான அமைதியைத் தேடிக்கொண்டார். அவரது இறுதி அஞ்சலி நிகழ்ச்சியின் போதும் “தங்காபாண்டியனே, தங்காமல் சென்றாயே” என நா தழுதழுக்கக் கலைஞரின் குரல் கண்ணீர் வடித்தது. “தங்கபாண்டியனை இழந்து தவிக்கும் எனக்கு, யாருக்கும் ஆறுதல் கூறும் சக்தி இல்லை” என கண்ணீர் அஞ்சலியில் குறிப்பிட்டார், கலைஞர். கழகத்துக்கும் ஈடுசெய்ய முடியாத இழப்பு என்று காலம் சொல்கிறது.

...துடிக்கும்

## பொருளாதாரம் கற்க...



இந்திய விடுதலைக்குப் பின்னர், வேளாண்மைத் துறையின் வளர்ச்சி, புதிய பொருளாதாரக் கொள்கை கொண்டு வந்த தொழில்துறை வாய்ப்புகள் எனப் பல அரிய தகவல்களுடன் வெளிவந்துள்ள ஆய்வு நூல் **‘இந்திய அரசியல் பொருளாதாரமும், வேளாண்மையும்: நேரு முதல் மோடி வரை’** என்கிற நூல்.

விடுதலைக்குப் பின் பிரதமர் நேரு பொறுப்பேற்றபோது முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் மொத்த நிதி ஒதுக்கீட்டில் 30 சதவிகிதம் அளவுக்கு வேளாண்மை, நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. தொடர்ச்சியாக, ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சிக் காலத்தில் வேளாண்மைக்கு அளிக்கப்பட்ட முக்கியத்துவம், மோடி ஆட்சிக் காலத்தில் சிதைக்கப்பட்ட வேளாண்மைத் திட்டங்கள் எனப் புள்ளிவிவரங்களுடன் விளக்குகிறார் நூலாசிரியர் முனைவர் பு.அன்பழகன். பாரதி புத்தகாலயம் வெளியிட்டுள்ள இந்த நூலுக்கு, பேராசிரியர் மு.நாகநாதன் அணிந்துரை அளித்துள்ளார். அரசியலுடன் பொருளாதாரம் கற்க இந்த நூல் துணை நிற்கும்.

## :.ப்ளாஷ்பேக்




### பாசறையில் தளபதி!

இளைஞர் அணி சார்பில், 2002-ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த கோவை மாவட்டம், மேட்டுப்பாளையத்தில் இரண்டு நாள் **‘பயிற்சிப் பாசறை’** நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அன்றைய சென்னை மாநகராட்சி மேயரும் கழக இளைஞர் அணி செயலாளருமான தளபதி அவர்கள் இரண்டு நாளும் 300-க்கும் மேற்பட்ட கழகத் தோழர்களோடு அங்கேயே தங்கி பாசறைக் கூட்டங்களுக்குத் தலைமை வகித்தார். ஏப்ரல் 27, 28 தேதிகளில் நடைபெற்ற கூட்டத்தில்,



குமாரசாமி

கோவை மு.இராமநாதன், வெற்றிகொண்டான், விடுதலைவிரும்பி ஆகியோர் பங்கேற்றுப் பயிற்சி அளித்தனர். கழகத்தின் ஐம்பெரும் முழக்கங்களில் ஒன்றான **‘அண்ணா வழியில் அயராது உழைப்போம்’** என்ற தலைப்பில் நான் 5 நிமிடம் உரையாற்றினேன். கழக வரலாற்றை எங்களுக்குக் கடத்திய கூட்டமாக இக்கூட்டத்தைக் குறிப்பிடுவேன்.

**-பொன்மலை குமாரசாமி, ஊராட்சி முன்னாள் செயலாளர், கிணத்துக்கடவு வடக்கு ஒன்றியம், கோவை தெற்கு மாவட்டம்.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### கழகம் காத்த ஜனநாயகம்!

**1977-ஆம் ஆண்டு, பிப்ரவரி 18 -ஆம் தேதி எழுதிய கடிதத்தில், ஜனநாயகம் காத்திட கழகம் சந்தித்த நெருக்கடிகளைப் பட்டியலிட்டார் கலைஞர். “இந்திய நாட்டின் ஜனநாயகத்தைக் காத்திட, வெற்றி தோல்விகள் பற்றிக் கவலைப்படாமல் - வேதனைகளால் சோர்ந்திடாமல் - கழகம் களத்தில் நின்ற காரணத்தால்தான் கழகத்தின் துணையையும் பெற்று, இந்திய நாட்டின் தியாகத் தலைவர்கள் இரண்டாவது சுதந்திரப் போராட்டத்தை நடத்திய காரணத்தால்தான், நாம் ஜனநாயகக் காற்றை சுவாசித்துக் கொண்டிருக்கிருக்க முடிகிறது, என எழுதினார். அந்தக் காலச் சூழலுக்குக் கலைஞர் எழுதிய கடிதம், இப்போதைய சூழலுக்கும் பொருந்துகிறது.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 214




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131